# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு மற்றும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள் சுட்டெண்கள் என்பனவற்றின் பெறுபேறுகள்


2019 யூனில் தயாரிப்பு நடவடிக்கைகள் 53.9 சுட்டெண் பெறுமதியொன்றினைப் பதிவுசெய்து உயர்வான வீதமொன்றில் விரிவடைந்தன. இது 2019 மேயுடன் ஒப்பிடுகையில் 3.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பாகும். தயாரிப்பு கொள்வனவு முகாமைத்துவச் சுட்டெண்ணின் இவ்விரிவாக்கத்திற்கு தொழில்நிலையில் விசேடமாக, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் உணரப்பட்ட குறைந்த தொழில்நிலை கிடைக்கப்பெறும் நிலையிலிருந்து உணவு மற்றும் குடிபானம் மற்றும் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையில் குறிப்பிடத்தக்க மீட்சி முக்கிய காரணமாக அமைந்திருந்தது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் குறிப்பாக, உணவு மற்றும் குடிபானங்கள் துறை தயாரிப்பில் விரிவுபடுத்தலும் 2019 யூனில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மேம்படுவதற்கு பங்களித்திருந்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்கத்தல்களினால் ஏற்பட்ட இடைத்தடங்கல்களுக்குப் பின்னர் பொருளாதார நடவடிக்கைகளின் சுமுகமடைதலுடன் புதிய கட்டளைகளும் உற்பத்தியும் யூனில் பாரியளவில் மீட்சியடைந்துள்ளன என அநேக பதிலிறுத்துநர்கள் எடுத்துக்காட்டியிருந்தனர்.

**கொ.மு.சு**

சுட்டெண் பெறுமதி **53.9**

2019 மேயுடன் ஒப்பிடுகையில் 3.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **41.0** | **50.7** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 52.0 | 53.0 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| உற்பத்தி | 55.0 | 56.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 45.0 | 55.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 44.5 | 51.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோக நேரம் | 52.5 | 51.0 | - | விரிவு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி விரிவடைதலுடன் கொள்வனவுகளின் இருப்பு கணிசமாக அதிகரித்தது. மேலும், உள்ளீடுகளின் வழங்கலுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் பணிக்கமர்த்தப்பட்ட இறுக்கமான பாதுகாப்பு வழிமுறைகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமை என்பனவற்றின் ஒன்றிணைந்த பெறுபேறாக நிரம்பலர் விநியோக நேரம் மெதுவான வீதமொன்றில் விரிவடைந்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்துத் துணைச் சுட்டெண்களும் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த விரிவாக்கமொன்றினை சமிக்ஞைப்படுத்தி நடுநிலையான 50.0 மட்டத்தினை விஞ்சியிருந்தது.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 மேயிலிருந்து 0.4 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சியுடன் 2019 யூனில் 49.4 சதவீதம் கொண்ட பெறுமதியினைப் பதிவு செய்தது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், யூரோ வலயம், ருஷியா மற்றும் சிங்கப்பூர் என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 யூனில் மெதுவடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்காவின் தயாரிப்பு கொ.முசு மேம்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], யூலை 15, 2019 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய காரணமாக 2019 மேயில் பதிவுசெய்த அதன் மிகக் குறைந்த மட்டத்திலிருந்து **பணிகள் துறையானது 2019 யூனில் மீட்சியடைந்தது.** புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் என்பனவற்றில் விரிவுபடுத்தல்கள், பணிகள் நடவடிக்கைகளின் மீட்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சீர்குலைந்திருந்த மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளின் புதிய வியாபார நடவடிக்கைகள் 2019 யூனில் விரிவடைந்தன. மேலும், நாட்டின் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் பாரியளவில் தங்கியிருக்கின்ற தங்குமிடம், உணவு மற்றும் குடிபான, ஏனைய தனிப்பட்ட பணிகள் துறைகளின் பதிலிறுத்துநர்கள், வியாபார நடவடிக்கைகள் படிப்படியாக மீண்டுவருகின்றன என்பதனைச் சுட்டிக்காட்டியிருந்தனர். நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகளும் தொடர்ச்சியான இரண்டு மாத வீழ்ச்சிக்குப் பின்னர் 2019 யூனில் அதிகரித்தன. எவ்வாறாயினும், பதவி வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதங்களின் காரணமாக தொழில்நிலையானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் இன்னும் குறைவான வேகத்தில் சீர்குலைவினைப் பதிவுசெய்தது.


# கொ.மு.சு

சுட்டெண் பெறுமதி

**53.1**

**2019 மேயுடன் ஒப்பிடுகையில் 8.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **44.7** | **53.1** | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 49.4 | 57.4 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| வியாபார நடவடிக்கைகள் | 41.7 | 57.4 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| தொழில்நிலை | 36.4 | 44.7 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 46.4 | 44.1 | - | வீழ்ச்சி, உயர்ந்த வீதத்தில் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் | 49.4 | 61.8 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| | | **ஏனைய சுட்டெண்கள்** | | |
| விதிக்கப்பட்ட விலைகள் | 50.6 | 47.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புக்கள் | 64.8 | 63.4 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சுற்றுலா விடுதிகள் மூலம் வழங்கப்பட்ட விலைத் தள்ளுபடிகள் மற்றும் தொழில் துறையில் போட்டித்தன்மையினை எதிர்கொள்வதற்காக போக்குவரத்துத் துணைத் துறைகளிலுள்ள நிறுவனங்களினால் வழங்கப்பட்ட விலைக் கழிவுகள் என்பன காரணமாக பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் 2019 யூனில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, அடுத்துவரும் மூன்று மாதங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவு 2019 யூனில் மெதுவான வேகத்தில் அதிகரித்தது.

### *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

2019 மேயில் 51.6 கொண்ட 33 மாத குறைவிலிருந்து 2019 யூனில் 51.9 ஆக சிறிதளவு அதிகரித்தது. உலகப் பணிகள் துறையின் வெளியீட்டின் வளர்ச்சியில் வேகத்தினை எடுத்துக்காட்டியது. வெளியீட்டு விரிவாக்கத்தின் வலுவான வீதம், நிதியியல் பணிகள் துறையில் பதிவாகியிருந்தது.

யப்பான், சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சு 2019 மேயுடன் ஒப்பிடுகையில் யூனில் மேம்பட்ட அவர்களது பணிகள் துறையை எடுத்துக்காட்டிய அதேவேளை இந்தியாவின் கொ.மு.சு வீழ்ச்சியினைக் காட்டியது.

*மூலம்: மார்க்கிட்[1], யூலை 12, 2019 இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.